1972 மார்ச் 28]

மக்கள், ரூ. 300-க்கு கீழ் வருமானம் உள்ளவர்கள் என்று அரசு சொன்ன காலத்தில் 24 லட்சம் மக்களில் 22½ லட்சம் மக்கள் அதனால் பலன் அடைந்து வந்திருக்கிறார்கள். போலிக் கார்டுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. த. சோணையா : போலிக் கார்டுகள் அதிகமாக பரவலாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரணமாக பாலில் தண்ணீர் ஊற்றினால் அந்தச் சிறிய குற்றத்திற்கு ஆறு மாதம், ஒரு வருடம் என்று தண்டிக்கிறார்கள். அதேபோல் போலிக் கார்டுகள் வைத்திருந்தவர்களை குறைந்தபட்சம் ஒரு வருடமாவது தண்டிப்பதற்கு அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி உத்தேசம் இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்தக் குடும்பக் கார்டுகள் வழங்குவதில் இப்போதுகூட கார்ட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் பாதுகாப்பு நிதிக்காக வசூலிக்கிறார்கள். இதற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது அது நிறுத்தப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். இன்றையதினம் கூட வட ஆற்காடு மாவட்டத்தில் சிலயிடங்களில் வசூலிக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முதல்வர் அவர்கள் இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். குடும்பக் கார்ட் கொடுக்கும் போது யாரும் அப்படிப் பணம் வாங்கக் கூடாது என்று. நானும் அறிவித்திருக்கிறேன். இப்போதும் நான் இந்த மன்றத்தின் மூலம் அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். குடும்பக் கார்ட் விநியோகத்தில் அதைப் பயன்படுத்தி நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குக் கூட ஒரு ரூபாய் வசூலிப்பது தவறு, வசூலிக்கக்கூடாது என்று அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன். வசூலிக்க மாட்டார்கள் என்றுதான் நம்புகிறேன். ஏதாவது தவறு செய்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[1972 மார்ச் 28

தஞ்சை மாவட்டத்தில் உழவர்களுக்கு நிலங்கள்

***754 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வரு வாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயி களுக்கு அளிக்கப்பட்ட நன்செய், புன்செய் நிலங்கள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 3,887.94 எக்கர் நன்செய், 3,155.67 எக்கர் புன்செய் நிலங்கள் 1971-72-ம் ஆண்டில் (31-1-1972 முடிய) தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயிகளுக்கு அளிக்கப் பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கோவில் நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் இவற்றில் குடியிருக்கும் விவசாயிகள் அல்லாத ஏழைகளுக்கு அந்த நிலத்தை பட்டா செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே போட்டிருக் கிற சட்டம் விவசாய சீர்திருத்தத்தின் கீழ் விவசாயிகள் நிலத் திற்கு சொந்தமில்லாமல் இருப்பார்களானல் அவர்களுக்கு அதை வாங்கிக் கொடுப்பது என்று போட்டிருக்கிறது. இதைப் பொறுத்து பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. துரை. கோவிந்தராசன் : தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நன்செய் நிலங்கள், புன்செய் நிலங்களில் இவை குறிப்பாக சில பகுதிகளில் அவர்கள் விவசாயம் செய்யாமல் இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்நிலங்களை தரிசாக வைத்திருப்பவர்களிடமிருந்து அதைப் பெறுவதற்கும் அதை மீண்டும் அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக் கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குறிப்பிட்ட காலத்திற்குள் விவசாயத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று கூறியிருப்பதால், அப்படி உறுப்பினர் அவர்கள் கூறியபடி தரிசாக வைத்திருந்தால் அதைப்பற்றி அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

1972 மார்ச் 28]

மணவாசியில் நூற்பு ஆலை

* 755. வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மணவாசியில் ஒரு நூற்பாலை துவக்க ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் மேற்கொண்டு வேலைகள் நடைபெறாமல் இருப்பதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரத்தில் நிறுவப்பட இருந்த 'மல்லிகேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் லிட்' என்ற பெயருடைய அந்த ஆலையின் கட்டடத்தின் முக்கியப்பகுதி மிகுந்த காலதாமதத்துடன் கட்டப்பட்டது. பின்னர், நிதி இடர்பாடுகளினாலும், பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டிருந்த மந்த நிலையினாலும் மேற்கொண்டு அத்திட்டத்தை முடிக்கும் வேலை அதன் நிர்வாக குழுவால் கைவிடப்பட்டது. தொடர்ந்து அவ்வாலைக்கான தொழில் உரிமமும் இந்திய அரசால் நவம்பர் 1969-ம் ஆண்டு பறிக்கப்பட்டுவிட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த ஆலையை நிறுவ முயற்சி செய்தவர் யார் ? என்ன நோக்கத்தோடு இதை அமைத்தார்கள் ? ஏன் இடையே நிறுத்திவிட்டுச் சென்று விட்டார் ? எங்கே போய் இருக்கிறார் ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நாட்டுக்காரர்தான். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். செல்வந்தர் குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் எங்கும் ஓடவில்லை என்றுதான் கருதுகிறேன். தொழில் மந்த நிலை காரணமாக விட்டு விட்டதாகத் தகவல்.

இராணிப்பேட்டையில் பீடித் தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம்.

* 756 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் அமைச்சர் ? தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டையில் அரசு சார்பில் பீடித் தொழில் செய்வோர் தொழில் கூட்டுறவு சங்கம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.